OS.No.345/2023, Dated 19.11.2025

The witness sworn under Oaths Act 1969 on this the 19th day of November 2025.

வா.சா.1 – அண்ணாமலை த/பெ. சித்தாத்தூரான் வரவழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

1ம் பிரதிவாதியின் கணவர் மற்றும் 2 முதல் 4 பிரதிவாதிகளின் தகப்பனார் பெயர் கோதண்டராமன் ஆகும். அவர் எனது உறிவனரா என்றால் இல்லை. கோதண்டராமன் என்ன தொழில் செய்து வந்தார் என்று எனக்கு தெரியாது. வழக்கு சொத்து கங்காபுரம் அடுத்த சமத்துவபுரத்தில் உள்ளது. வழக்கு சொத்தை நான் பார்த்துள்ளேன். பொதுவாக ஒரு ஆவணம் எழுதும்போது அது என்ன வகையான ஆவணம் என்று தலைப்பிட்டு தான் எழுதுவார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் அது என்ன வகையான ஆவணம் என்று தலைப்பு குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் மூன்றாம் பிரதிவாதியால் வாங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கோதண்டராமனும், ஜவகரும் எழுதிக்கொடுத்ததாக கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் மூன்றாம் பிரதிவாதி கையொப்பம் செய்ததாகதான் உள்ளது என்றால் இல்லை கோதண்டராமன் மற்றும் ஜவகர் இருவருமே கையொப்பம் செய்தார்கள். அந்த பத்திரத்தில் கோதண்டராமன் கையொப்பம் மட்டும் தான் உள்ளது என்றால் சரிதான். ஜவகர் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார். வழக்கு சொத்து கோதண்டராமனுக்கு பாத்தியப்பட்டிருந்தது. அந்த சொத்து மூன்றாம் பிரதிவாதி ஜவகருக்கு பாத்தியப்பட்டது அல்ல. ஒரு ஆவணம் எழுதப்பட்டால் அதில் யார் யாருக்கு எழுதிக்கொடுப்பது என்றும், சொத்து விபரங்கள் குறிப்பிட்டும் தான் எழுதப்படும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொத்து விபரம் என்று தனியாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து தமிழக அரசால் கட்டி கொடுக்கப்பட்ட வீடுகளில் ஒன்று என்றால் சரிதான். தமிழக அரசால்

கோதண்டராமனுக்கு அந்த வீட்டிற்கு நிபந்தனை பட்டா வழங்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். கோதண்டராமன் இறக்கும் வரை அந்த வீட்டில் தான் வாழ்ந்து வந்தார் என்றால் இல்லை. அதை அவர் வாடகைக்கு தான் விட்டிருந்தார். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும், கோதண்டராமன் உயிருடன் இருக்கும் வரை அந்த வீட்டில் தான் வாழ்ந்து வந்தார் என்றால் இல்லை. தாவா சொத்தை சுற்றி வீடுகள் தான் உள்ளன. தாவா சொத்தின் தெற்கில் பாதையும், மேற்கிலும் பாதையும், வடக்கில் முனுசாமி என்பவரின் வீடும் உள்ளது கிழக்கில் வீடு உள்ளது அது யாருடையது என்று எனக்கு தெரியாது. மேற்படி ஜக்குபந்தியை அறிவிப்பிலோ, தாவாவிலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் தவறான ஜக்கு பந்தியை குறிப்பிடுகிறேன் என்றாலும், அதனால் தான் அதை தாவாவிலும், அறிவிப்பிலும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் நீள அகலம் எனக்கு தெரியாது. எனது அறிவிப்பிலும், தாவா சொத்தின் நீள அகலம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து அரசால் வழங்கப்பட்ட தொகுப்பு வீடு தான் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் தாவா சொத்து மனை என்று தான் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் வீட்டு மனை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா சொத்தில் விபரங்கள் எதுவும் தெரியாது என்பதால் தான் வா.சா.ஆ.1 ஆவணத்தில் வீட்டு மனை என்று குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நம்பிக்கையின் பேரில் அந்த ஆவணம் எழுதப்பட்டது. அந்த ஆவணம் மோசடியாக உருவாக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. நான் இந்திரவனத்தில் வசித்து வருகிறேன். நான் டாடா ஏசி வாகனம் வைத்துள்ளேன். நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் மாதம் ரூ.40,000/– வரை சம்பாதிப்பேன். எனக்கு வருவாய் குறைவானது என்றாலும், ரூ.40,000/– சம்பாதிப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் ரூ.2,50,000/– கொடுத்ததாகவும், மொத்த பணமும் தயாராகதான் வைத்திருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பணத்தை நான் கையில் தான்

வைத்திருந்தேன். அப்போது ரூ.1000/– தாள்கள் இருந்தது. வா.சா.ஆ.1 ஆவணம் 26.05.2016 அன்று எழுதப்பட்டதாக தான் உள்ளது என்றால் சரிதான். 08.11.2016 அன்று மத்திய அரசு ரூ.500/– மற்றும் ரூ.1000/– நோட்டுகள் செல்லாது என்று அறிவித்தது என்றால் சரிதான். கையில் இருந்த ரூ.500/– மற்றும் ரூ.1000/– நோட்டுகளை வங்கி மூலம் மாற்றிக்கொள்ளலாம் என்றும், ஒரு நாளைக்கு ரூ.4000/– எடுத்துக்கொள்ளலாம் என்றும் அறிவித்தது என்றால் சரிதான். என்னிடம் இருந்த ரூ.1000/– நோட்டுக்களை நான் மாற்றிக் கொண்டேன் என்றால் சரிதான். அந்த வங்கி கணக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் நான் கையில் வைத்திருந்த பணத்தை நகைகளாகவும் வாங்கினேன். அப்போது என்னிடம் நகைகள் இருந்தது என்றால் சரிதான். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும், இவ்வளவு தொகை கொடுத்து சொத்து வாங்கும் வசதியே எனக்கு இல்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்பட்ட பின்னிட்டு நான் கோதண்டராமனை பத்திர பதிவிற்கு அழைத்தேனா என்றால் அழைத்தேன். ஆனால் தேதி ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தி சுமார் 6 மாதங்கள் கழித்து நான் கோதண்டராமனிடம் கேட்டேன். கோதண்டராமன் எவ்வித ஆவணங்களும் ஏற்படுத்தி கொடுக்கவில்லை என்றாலும், நான் அவரிடம் கேட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆறு மாதங்கள் கழித்து நான் கேட்ட பின்னிட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. அவர் இறந்த பிறகும் பிரதிவாதிகளிடம் கேட்டு பார்த்தேன். கோதண்டராமன் எப்போது இறந்தார் என்றால் 2018ம் ஆண்டு இறந்தார். கோதண்டராமன் இறந்தது எனக்கு நேரடியாகவே தெரியும். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அவர் இறந்த விபரமே எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. கோதண்டராமன் இறந்த விபரம் தெரிந்திருந்தால் உடனடியாக அவருடைய வாரிசுகளுக்கு அறிவிப்பு அனுப்பியிருப்பேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 கோதண்டராமனின் இறப்பு சான்றிதழை இணையதளம்

மூலம் பெற்றேன். எப்போது பெற்றேன் என்று தேதி ஞாபகம் இல்லை. வழக்கு செய்வதற்கு முன் அறிவிப்பு அனுப்பிய போது தான் அந்த சான்றிதழை பெற்றுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் மோசடியாக உருவாக்கப்பட்டது என்றாலும், அதற்காக இறப்பு சான்றிதழை பெற்றேன் என்றால் சரியல்ல. கோதண்டராமனின் வாரிசுகள் யார் என்றால் அவர்களின் பெயர் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. அதில் ஒரு வாரிசுதாரர் சென்னையிலும், ஜவகர் நெடுங்குணத்திலும் மற்றவர்களும் சென்னையிலும் தான் வசிக்கிறார்கள். ஜவகரின் தாயாரும் நெடுங்குணத்திலும் உள்ளார். மேற்சொன்னவாறுதான் அறிவிப்பிலும், தாவாவிலும் குறிப்பிட்டுள்ளேனா என்றால் அவ்வாறு தான் குறிப்பிட்டுள்ளேன். மூன்றாம் பிரதிவாதி ஜவகர் மட்டும் தான் நெடுங்குணத்தில் வசிக்கிறார்கள் என்றாலும், மற்ற வாரிசுகள் தாவா சொத்தில் தான் வசிக்கிறார்கள் என்றால் சரியல்ல. அந்த வீடு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. நான் பிரதிவாதிகளுக்கு வா.சா.ஆ.4 அறிவிப்கை அனுப்பியிருந்தேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பை பிரதிவாதிகள் அனைவருக்கும் நெடுங்குணம் முகவரிக்கு தான் அனுப்பினேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் தாவா சொத்தில் தான் வசிக்கிறார்கள் என்றாலும், தவறாக நெடுங்குணம் முகவரிக்கு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரியல்ல. அவர்கள் அந்த முகவரியில் தான் வசிக்கிறார்கள். நான் அனுப்பிய அறிவிப்பை பிரதிவாதிகள் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்த அஞ்சல் ஒப்புகை அட்டைகளில் அஞ்சலம் என்பவர் பெற்றதாக தான் உள்ளதாகவும், பிரதிவாதிகள் பெற்றதாக இல்லை என்றால் பிரதிவாதிகள் தான் பெற்றார்கள். மூத்த மகனின் மனைவி தான் அஞ்சலம் என்பவர். நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண்.466பி/2 200 சதுர மீட்டர் அளவுள்ள வீட்டு மனை எண்.6 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய அறிவிப்பில் 206 சதுர மீட்டர் அளவுள்ள வீட்டு மனை எண்.5 என்று

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது தட்டச்சு பிழை ஆகும். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சொத்தின் விபரங்களே எனக்கு தெரியாததால் தான் அறிவிப்பிலும், வா.சா.ஆ.1 ம் தவறான சங்கதிகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஒரு சொத்தை கிரையம் வாங்கும்போது, அந்த சொத்தின் மூல பத்திரத்தையும் வில்லங்கத்தையும் பார்க்க வேண்டுமென்றால் சரிதான். ஆனால் அந்த சொத்து அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டது என்பதால் அவற்றை பார்க்க தேவையில்லை. வழக்கு சொத்திற்கு நான் வில்லங்கம் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் சொத்தை வாங்க வேண்டுமென்ற நோக்கில் இல்லை என்பதால் தான் வில்லங்கத்தை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் தற்சமயம் சேத்பட் தாலுக்காவில் வசிக்கிறேன். தாவா சொத்து முன்பு வந்தவாசி தாலுக்காவில் இருந்து தற்போது சேத்பட் தாலுகாவுடன் சேர்க்கப்பட்டுள்ளது. சேத்பட்டு எப்போது தாலுக்காவாக உருவாக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. 2012ம் ஆண்டே சேத்பட் தாலுக்கா உருவாக்கப்பட்டது என்றால் இல்லை. நான் வசிப்பதும், தாவா சொத்து உள்ளதும் சேத்பட் தாலுக்கா தான் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் நான் சேத்பட் தாலுக்காவில் வசிப்பதாகவும், தாவா சொத்து வந்தவாசி தாலுக்காவில் உள்ளதாகவும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2025.11.19 06:41:10 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்